## மாமன்றக் கூட்டம்

**கோப்பு எண் - ந.க.எண் 9548/2021/ எம்.சி. 8**

**நாள் - 25.01.2022 பிற்பகல் 4.00 மணி**

**தலைமை - திரு.ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப.,**
**ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**கலந்துகொள்வோர் - துணை ஆணையர்,**
**அனைத்து துறை தலைமைகள்,**
**அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்**

---

## பொருள் எண் 1

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - 2022-2025-ம் ஆண்டிற்கான (மூன்றாண்டுகள்) வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2021-22-ம் ஆண்டிற்கு ஒப்படைக்கப்பட்ட இனங்களுக்கு 5 சதவீதம் உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - முன் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

பார்வை
1) அரசு ஆணை (நிலை)எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள்.25.05.2009.
2) ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.29.12.2021

---

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட குத்தகை காலம் மூன்றாண்டு முடிவுற்றது மற்றும் 2020-21-ல் ஏலம் கோரப்படாத கீழ்கண்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு 2021-2024-ம் ஆண்டிற்கு (மூன்றாண்டுகள்) மாமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்த ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**2021-2024-ம் ஆண்டிற்கான புதிய இனங்கள்.**

2021-2022-ம் ஆண்டில் மூன்றாண்டு முடிவுற்ற இனங்கள் புதியதாக ஏலத்தில் சேர்க்கப்பட வேண்டியது. (வரிசை எண். 1 மற்றும் 2 )

| வ. எண் | வார்டு எண். | குத்தகை எண். | குத்தகை இனம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 52 | 36 | சக்தி ரோடு ஆடு மாடு அறுவை மனை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 75,000/- |
| 2 | 83 | 48 | தியாகி குமரன் மார்கெட்டில் தரை கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் தியாகி குமரன் மார்க்கெட்டிற்கு மேட்டுப்பாளையம் சாலை மொத்த வியாபார மண்டியிலிருந்து வரும் சரக்கு வண்டிகளை தவிர மற்ற பகுதிகளிலிருந்து வரும் சரக்கு வண்டிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் (மாநகராட்சி நிரந்தர கடைகள் நீ’கலாக) உரிமம் | 2,50,000/- |

2021-2022-ம் வருடத்தில் ஏலம் கோரப்படாத இனங்கள் வரிசை எண்.3 முதல் 8 வரை

| வ. எண் | வார்டு எண். | குத்தகை எண். | குத்தகை இனம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 3 | 52 | 36 | சத்திரோடு நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (ஆம்னி பேருந்து நிலையத்தில்) | 1,00,000/ - |
| 4 | 52 | 34 | ஆம்னி பேருந்து நிலையத்தில் ஆம்னி பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,50,000/ - |
| 5 | 82 | 70 | உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1,50,000/ - |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 54 | 61 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 1,50,000/- |
| 7 | 82 | 67 | உக்கடம் பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம்வசூலிக்கும் உரிமம். | 1,25,000/- |
| 8 | 83 | 51 | தியாகி குமரன் மார்க்கெட் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 87,500/- |

முந்தைய ஆண்டியில் ஏலம் கோரப்படாத இனங்கள் தற்போது மராமத்து பணிகள்செய்ய கோப்பு நடவடிக்கையில் உள்ளது. எண்.9 முதல் 19 வரை

| வ. எண் | குத்தகை இனம் | வரிவசூலரின் குறிப்பு |
|---|---|---|
| 9 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் அறை எண் 4ஐ தவிர | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள பயணிகள் இரவு தங்கும் விடுதி பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| 10 | உக்கடம் பேருந்து நிலைத்தில் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம். | உக்கடம் பேருந்து நிலைத்தில் தொலைக்காட்சிப் பெட்டி வைக்கும் அறை 82-வது வார்டு சுகாதார ஆய்வாளர் அலுவலகமாக பயன்படுத்தப்பட்டுவருகிறது. |
| 11 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் பொருள் காப்பகம் கட்டண வசூலிக்கும் உரிமம் | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் பொருள் காப்பகம் பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| 12 | சீனிவாசபுரம் கல்யாண மண்டபம் பராமரிக்கும் உரிமம். | சீனிவாசபுரம் கல்யாண மண்டபம் கொரோனா மையமாக செயல் பட்டுவருகிறது. |
| 13 | புலியகுளம் திருமண மண்டபம் பராமரிக்கும் உரிமம் | புலியகுளம் திருமண மண்டபம் பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| 14 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம். | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி வைக்கும் அறை பராமரிக்கும் நிலையில் இல்லை. |
| 15 | வ.உ.சி.பூங்கா சிறுவர் இரயில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | வ.உ.சி. பூங்கா சிறுவர் இரயில் பழுதடைந்து ஓடாத நிலையில் உள்ளது. |
| 16 | சிவானந்த காலனி அறிவியல் பூங்கா கட்டணம் வசூலிக்கும் உரிமம். | சிவானந்த காலனி அறிவியல் பூங்கா பராமரிக்கப்படாத நிலையில் உள்ளது. |
| 17 | உக்கடம் பேருந்து நிலையம் பொருள் காப்பகம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | உக்கடம் பேருந்து நிலையம் பொருள் காப்பகம் அறை பூட்டிய நிலையில் உள்ளது. |
| 18 | வ.உ.சி பூங்கா வளாகம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | வ.உ.சி பூங்கா வளாகம் நவீன கட்டண கழிப்பிடம் பழுதடைந்து தண்ணீர் வசதி இல்லாத நிலையில் உள்ளது. |
| 19 | லிங்கப்ப செட்டிவீதி நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | லிங்கப்ப செட்டிவீதி நவீன கட்டண கழிப்பிடம் மற்றும் குளியலறை பராமரிப்பு இல்லாமல் பூட்டப்பட்டுள்ளது. |

**2021-2022-ம் ஆண்டில் முதலாம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட இனங்களுக்கு 5 சதவீதம் உயர்வு செய்து இரண்டாம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட வேண்டிய இனங்கள்.**

| வ. எண் | குத்தகை எண். | குத்தகை இனம்/ குத்தகைதாரர் பெயர் | 2021-2022-ம் ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | 2022-2023-ம் ஆண்டுக்கு 5சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 20 | 87 | அவிநாசி ரோடு பாஸ்போாட் அலுவலகம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். **திரு.M.திவாகர்** | 1,22,000/- | 1,28,100/- |
| 21 | 60 | காந்திபுரம் நகர பேருந்து நிலையம் புதிய கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் **திருமதி.V.அனிதா** | 12,34,567/- | 12, 96,295/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | 56 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பிடம் 1,2,3 மற்றும் 4 ஆகிய தளங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். **திரு.B.வரதராஜன்** | 15,66,009/- | 16,44 309/- |
| 23 | 53 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். **திருமதி.S.வனிதா** | 14,06,700/- | 14,77,035/- |
| 24 | 68 | டவுன்ஹால் நவீன கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் **திரு.V.M.அப்துல் சுக்கூர்** | 9,12,000,- | 9,57,600/- |
| 25 | 43 | உப்பிப்பாளையம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் **திரு.M.திவாகர்** | 1,50,350,- | 1,57,868/- |

**<u>2021-2022-ம் ஆண்டில் இரண்டாம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட இனங்களுக்கு 5சதவீதம் உயர்வு செய்து மூன்றாம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட வேண்டிய இனங்கள்.</u>**

| **வ. எண்** | **குத்தகை எண்.** | **குத்தகை இனம்/ குத்தகைதாரர் பெயர்** | **2021-2022-ம் ஆண்டு குத்தகைத் தொகை ரூ.** | **2022-2023-ம் ஆண்டுக்கு 5சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூ.** |
|---|---|---|---|---|
| 26 | 40 | சிவானந்தா காலனி நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். **திரு.G.ரங்கராஜ்** | 70,455/- | 73,978/- |
| 27 | 50 | இராஜவீதி இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். **திரு.V.K.ரஹ்மத்துல்லா** | 20,80,050/- | 21,84,053/- |
| 28 | 106 | அரசு மருத்துவமனை எதிரே உள்ள நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். **திரு.V.K.ரஹ்மத்துல்லா** | 5,09,250/- | 5,34,713/- |
| 29 | 66 | குருஹோட்டல் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் **திரு.M.அரவிந்த்** | 17,36,700/- | 18,23,535/- |
| 30 | 75 | இராமர் கோவில் வீதி மார்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் **திரு.V.K.ரஹ்மத்துல்லா** | 24,67,500- | 25,90,875/- |
| 31 | 38 | சீனிவாசபுரம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் **திரு.S.சந்திரசேகரன்** | 27,93,000/ - | 29,32,650/ - |
| 32 | 39 | சீனிவாசபுரம் நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். **திரு.C.செல்வம்** | 3,51,960/- | 3,69,558/- |
| 33 | 59 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி அமைத்து விளம்பரம் செய்யும் உரிமம். **திரு.R.அலெக்ஸ்பிரபு** | 1,48,050/- | 1,55,453/- |
| 34 | 64 | காந்திபுரம் நகர பேருந்து நிலையத்தில் இரண்டு சக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். **திரு.N.ரகோத்தமன்.** | 13,04,100/- | 13,69,305/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 35 | 63 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் தரைதள கேரேஜ் பகுதி மற்றும் 5-வது தளம் பகுதியில் இருசக்கர வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமம்.<br>**திரு.M.ஹரிகிருஷ்ணன்** | 14,84,700/- | 15,58,935/- |
| 36 | 55 | காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம் (ஆர்.வி.ஹோட்டல் எதிரில்) கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.<br>**திரு.C.செல்வம்** | 10,51,050/- | 11,03,603/- |
| 37 | 57 | காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம் பி.3 காவல் நிலையம் அருகில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.<br>**திரு.M.ஹரிகிருஷ்ணன்.** | 18,90,000/- | 19,84,500/- |

ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்ட இனம்

| **வ. எண்** | **குத்தகை எண்.** | **குத்தகை இனம்** |
|---|---|---|
| 38 | 49 | தியாகி குமரன் மார்க்கெட் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |
| 39 | 46 | வ.உ.சி.பூங்கா மிருகக் காட்சி சாலை மற்றும் சிறுவர் விளையாடும் இடம் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம். |

**அ** வரிசை எண். 1 முதல் 8 வரை உள்ள இனங்களை 2022-2025-ம் ஆண்டிற்கான ஏல இனங்களில் சேர்க்கவும், நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பு மற்றும் வைப்புத்தொகையினை அங்கீகரிக்கவும் மேலும் பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படியும், அவ்வப்பொழுது மத்திய மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் வரிகளை குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளை விதிக்கலாம். குத்தகை இனங்களில் ஏற்கனவே துறை மூலம் வசூல் செய்யப்படும் இனங்களுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்கும் வரை தொடர்ந்து துறை மூலம் வசூல் செய்யலாம்.

**ஆ** வரிசை எண்.9 முதல் 19 வரை உள்ள இனங்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட வார்டு இளம் பொறியாளர்/உதவி பொறியாளர்களுக்கு அலுவல்சாரா குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்று ஏலத்தில் சேர்க்க அறிக்கை பெற்றபின் மேற்படி இனங்களை ஏலத்தில் சேர்க்கலாம். பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்கும் வரை தொடர்ந்து துறை மூலம் வசூல் செய்யலாம்.

**இ** வரிசை எண்.20 முதல் 25 வரை (6 இனங்கள்) இனங்களுக்கு முதலாம் ஆண்டு குத்தகை தொகையில் 5சதவீதம் உயர்வு செய்து இரண்டாம் ஆண்டுக்கு புதுப்பிக்கலாம்.

**ஈ** வரிசை எண்.26 முதல் 37 வரை (12 இனங்கள்) இனங்களுக்கு இரண்டாம் ஆண்டு குத்தகை தொகையில் 5சதவீதம் உயர்வு செய்து மூன்றாம் ஆண்டுக்கு புதுப்பிக்கலாம்.

**உ** வரிசை எண்.38-ல் உள்ள இனம் **திரு.V.M.அப்துல்சுக்கூர்** அவர்களுக்கு ரூ.15,00,000/- (ஒரு வருடத்திற்கு) 2020-2021-ம் ஆண்டிற்கு நடைபெற்ற பொது ஏலம் மூலம் பெறப்பட்ட உயர்ந்தப்பட்ச ஏலக்கோரிக்கையின் அடிப்படையில் குத்தகை தொகை செலுத்த அறிவுப்பு கடிதம் வழங்கப்பட்டது. ஆனால் அவ்விடத்தில் புதியதாக கடைகள் கட்டப்பட்டதால் இவ்வினத்திற்கு வழங்கப்பட்ட உரிமம் ரத்து செய்யப்பட்டது. எனவே இவ்வினத்தினை மறு ஆய்வு செய்து ஏலத்தில் சேர்க்க கோப்பு நடவடிக்கையில் உள்ளது. தற்போது நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடத்தில் மட்டும் துறை மூலம் மாநகராட்சி பணியாளர்களால் கட்டணம் வசூல் செய்யப்பட்டுவருகிறது.

**ஊ** வரிசை எண்.39-ல் உள்ள இனம் கட்டமைப்பு வசதிகள், பராமரிப்பு பணிகள் போன்ற காரணங்களுக்காகக் வ.உ.சி உயிரியல் பூங்காவுக்கான அங்கீகாரத்தினை மத்திய உயிரியல் பூங்கா ஆணையம் ரத்து செய்த காரணத்தினால் இவ்வினத்தினை தற்காலிகமாக ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்யவும்.

எ வரிசை எண்.20 முதல் 25 வரை (6 இனங்கள்) மற்றும் வரிசை எண்.26 முதல் 37 வரை (12இனங்கள்) உள்ள மொத்த 18 குத்தகை இனங்களுக்கு 5 சதவீதம் உயர்வு செய்து உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

ஏ இரண்டு மற்றும் மூன்றாம் ஆண்டுகளுக்கு புதுப்பிக்கப்படாத இனங்கள் மற்றும் குத்தகைதாரர்களால் ஏற்று கொள்ளாத அனைத்து இனங்களுக்கும் துறை மூலம் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு கட்டணம் வசூலிக்கவும் அதற்கான இரசீதுகளை அச்சிடும் செலவு மற்றும் விளம்பர செலவுகளை ஏற்கவும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண்.0117/2022/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 20 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2021-2022-ன் கீழ் ரூ.10.01 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 12 சிப்பங்களாக (89 சாலை பணிகள்) பிரிக்கப்பட்டு மாமன்ற தீர்மான எண்.498 நாள்.26.10.2021ல் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.19089/2021/E2 நாள்.12.11.2021ன் படி (TURIP) 2021-2022-ன் கீழ் ரூ.10.01 கோடி அனுமதி பெறப்பட்டு, 01.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 10 சிப்பங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் 17.12.2021 தேதி முன் அனுமதியின்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களுக்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மாமன்ற தீர்மான எண்.553 நாள்.31.12.2021–ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்டுள்ள 12 சிப்பங்களில், ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத இரண்டு (5 மற்றும் 10) சிப்பங்களுக்கு 11.01.2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 5–வது சிப்பத்திற்கு மட்டும் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு .01.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| சிப்பம் எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தாரர் |
|---|---|---|---|---|---|
| 8093/ 2021/ எம்டி.3/ சிப்பம் 5 | வார்டு எண். 75– க்குட்பட்ட ஆப்பிள் கார்டன், கிரீன் பார்க், நியூ போயாஸ் கார்டன் 2,3,4,5,6 மற்றும் 7 வீதி, பாத்திமா நகர் 2,3,5 வீதி பகுதிகளில் தார்தளம் அமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணி. | 87.10 | 30.12.2021 | 1).தி/ள்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 2.21% குறைவு | தி/ள்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 2.21% குறைவு |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களுக்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 8093/2021/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 21 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டல வார்டு பகுதிகளில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையங்கள் மற்றும் மாநகர பொது சுகாதார ஆய்வுக்கூடங்கள் கட்டுதல் பணிக்கு **15** வது தேசிய நிதிக்குழு – சுகாதார பணி 2021- 2022 -க்கான திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.32454/2021/AMRUT-2 நாள்.**17.12.2021**-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிகளுக்கு **19.01.2022** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு **24.01.2022** அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| | | | கிழக்கு மண்டலம் | | | |
| 1 | கிழக்கு மண்டலம் – வார்டு எண்.57–க்குட்பட்ட காந்திபுதூர், லட்சுமிபுரம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br>ந.க.எண்.9677/2021/எம்.டி.3 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள்.17.12.21 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. கே.ராமசாமி மதிப்பீட்டை விட 1.38% குறைவு<br>2).தி/ள். கே.எஸ்.ஆர் அன் கோ மதிப்பீட்டை விட 0.86% குறைவு<br>3). தி/ள்.ஆர்.ஆர் எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 11.08% அதிகம்<br>4).திரு. ஆர்.நடராஜன் மதிப்பீட்டை விட 0.95 % குறைவு<br>5).திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 2.81% குறைவு | திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 2.81% குறைவு |
| 2 | கிழக்கு மண்டலம்– வார்டு எண்.61–க்குட்பட்ட நெசவாளர் காலனி, ஒண்டிப்புதூர் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br>ந.க.எண்.9678/2021/எம்.டி.3 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள்.17.12.21 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. கே.ராமசாமி மதிப்பீட்டை விட 1.38% குறைவு<br>2).தி/ள். கே.எஸ்.ஆர் அன் கோ மதிப்பீட்டை விட 1.01% குறைவு<br>3).திரு. ஆர்.நடராஜன் மதிப்பீட்டை விட 1.03 % அதிகம் | திரு. கே.ராமசாமி **மதிப்பீட்டை விட 1.38% குறைவு** |
| 3 | கிழக்கு மண்டலம்– வார்டு எண். 65க்குட்பட்ட இந்திரா நகர் சவுரிபாளையம் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br>ந.க.எண்.9681/2021/எம்.டி.3 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள்.17.12.21 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. கே.முருகேசன் மதிப்பீட்டை விட 0.27% அதிகம் (விலை குறைப்பிற்குப் பின்) 0.06% குறைவு<br>2).திரு.கே.சுந்தரம் மதிப்பீட்டை விட 0.33% அதிகம் | திரு. கே.முருகேசன் **மதிப்பீட்டை விட 0.06% குறைவு** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | கிழக்கு மண்டலம்– வார்டு எண்.58க்குட்பட்ட நீலிகோணாம்பாளையம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br>ந.க.எண்.9675/2021/எம்.டி.3 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள்.17.12.21 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. கே.முருகேசன் மதிப்பீட்டை விட 0.06% குறைவு (விலை குறைப்பிற்குப் பின்) 0.12% குறைவு<br>2).திரு. கே.சுந்தரம் மதிப்பீட்டை விட 0.42% குறைவு | திரு. கே.முருகேசன் **மதிப்பீட்டை விட 0.12% குறைவு** |
| 5 | கிழக்கு மண்டலம்– வார்டு எண்.58க்குட்பட்ட துளசியம்மாள் லே அவுட் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br>ந.க.எண்.9674/2021/எம்.டி.3 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள்.17.12.21 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. கே.முருகேசன் மதிப்பீட்டை விட 0.06% குறைவு (விலை குறைப்பிற்குப் பின்) 0.12% குறைவு<br>2).திரு. கே.சுந்தரம் மதிப்பீட்டை விட 0.03% **அதிகம்** | திரு. கே.முருகேசன் **மதிப்பீட்டை விட 0.12% குறைவு** |
| 6 | கிழக்கு மண்டலம் – வார்டு எண்.64–க்குட்பட்ட உப்பிலிபாளையம் பகுதியில் நகரப்பொது சுகாதார ஆய்வு கூடம் கட்டுதல்.<br>ந.க.எண்.9673/2021/எம்.டி.3 | 22.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள்.17.12.21 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. கே.ராமசாமி மதிப்பீட்டை விட 1.32% குறைவு<br>2).தி/ள். கே.எஸ்.ஆர் அன் கோ மதிப்பீட்டை விட 0.69% குறைவு<br>3).திரு. ஆர்.நடராஜன் மதிப்பீட்டை விட 0.78 % குறைவு | திரு. கே.ராமசாமி மதிப்பீட்டை விட 1.32% குறைவு |
| | | | மேற்கு மண்டலம் | | | |
| 7 | மேற்கு மண்டலம்– வார்டு எண்.22க்குட்பட்ட பாரதியார் பூங்கா சாலை –2 பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br>ந.க.எண்.9658/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட 5.00 % குறைவு<br>2).தி/ள்.அம்மன் பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 1.01%குறைவு<br>3).திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 0.74 % குறைவு | திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட 5.00 % குறைவு |
| 8 | மேற்கு மண்டலம்– வார்டு எண்.19–க்குட்பட்ட வீரகேரளம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br>ந.க.எண். 9659/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1),திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 8.56 % அதிகம்<br>2).தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.75% குறைவு | தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.75% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | மேற்கு மண்டலம்– வார்டு எண்.17–க்குட்பட்ட மருதமலை அடிவாரம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9661/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1),திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 1.01 % குறைவு<br><br>2).தி/ள்.அம்மன் பில்டர்ஸ் மதிப்பீட்டை விட 0.49 % குறைவு | திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 1.01 % குறைவு |
| 10 | மேற்கு மண்டலம்– வார்டு எண்.20க்குட்பட்ட கருமலைசெட்டிபாளையம் சீரநாயக்கன்பாளையம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9662/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1). திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட 5.00 % குறைவு | திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட 5.00 % குறைவு |
| 11 | மேற்கு மண்டலம்– வார்டு எண்.24–க்குட்பட்ட தேவாங்கபேட்டை ஆர்எஸ்புரம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9731/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 1.01 % குறைவு<br><br>2).திரு. பி.எம்.மாரிமுத்து மதிப்பீட்டை விட 0.79 % குறைவு | திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 1.01 % குறைவு |
| 12 | மேற்கு மண்டலம்– வார்டு எண். 6க்குட்பட்ட காமராஜர் நகர் டிவிஎஸ் நகர் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9663/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1),திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 8.56 % அதிகம்<br><br>2).தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.75% குறைவு | தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.75% குறைவு |
| 13 | மேற்கு மண்டலம்– வார்டு எண்.13–க்குட்பட்ட புவனேஸ்வரி நகர் (கே கே புதூர்) பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9664/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1),திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 8.56 % அதிகம்<br>2).தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.75% குறைவு<br>3).தி/ள்.ஆர்.ஆர். எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 5.00% குறைவு<br>4).திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.06 % அதிகம் | தி/ள்.ஆர்.ஆர். எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 5.00% குறைவு |
| வடக்கு மண்டலம் | | | | | | |
| 14 | வடக்கு மண்டலம்– வார்டு எண்.3–க்குட்பட்ட சுப்பிரமணியம்பாளையம் மாநகராட்சி பள்ளிக்கு அருகில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9712/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திருமதி. கே.பங்கஜம் மதிப்பீட்டை விட 4.80 % அதிகம்<br><br>2).தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.72% குறைவு | தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.72% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | வடக்கு மண்டலம்– வார்டு எண்.4–க்குட்பட்ட அப்பநாயக்கன்பாளையம் நியாயவிலை கடைக்கு அருகில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9713/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.11.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திருமதி. கே.பங்கஜம் மதிப்பீட்டை விட 4.80 % அதிகம்<br><br>2).தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.72% குறைவு | தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.72% குறைவு |
| 16 | வடக்கு மண்டலம்– வார்டு எண்.38–க்குட்பட்ட பீளமேடு – கேப் நீம் லேண்ட் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9716/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.11% குறைவு | திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.11% குறைவு |
| 17 | வடக்கு மண்டலம்– வார்டு எண்.39–க்குட்பட்ட பாரதி காலனி பீளமேடு பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9717/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.11% குறைவு | திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 0.11% குறைவு |
| 18 | வடக்கு மண்டலம்– வார்டு எண்.42–க்குட்பட்ட சின்னவேடம்பட்டி பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9721/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திருமதி. கே.பங்கஜம் மதிப்பீட்டை விட 4.80 % அதிகம்<br><br>2). தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.72% குறைவு | தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.72% குறைவு |
| 19 | வடக்கு மண்டலம்– வார்டு எண். 55க்குட்பட்ட பிருந்தாவன் பூங்கா அருகில் தெற்குபுறமாக உள்ள பிரிவு அலுவலகம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9723/2021/எம்.டி.2 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.11.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திருமதி. கே.பங்கஜம் மதிப்பீட்டை விட 4.80 % அதிகம்<br><br>2).தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.72% குறைவு | தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.72% குறைவு |
| 20 | வடக்கு மண்டலம்– வார்டு எண்.38–க்குட்பட்ட பயனீயர் மில் ரோடு பீளமேடு பகுதியில் நகரப்பொது சுகாதார ஆய்வு கூடம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9737/2021/எம்.டி.2 | 22.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. கே.ராமசாமி மதிப்பீட்டை விட 1.36% குறைவு<br><br>2).தி/ள். கே.எஸ்.ஆர் அன் கோ மதிப்பீட்டை விட 0.64% குறைவு<br><br>3).திரு. ஆர்.நடராஜன் மதிப்பீட்டை விட 0.43% குறைவு | திரு. கே.ராமசாமி மதிப்பீட்டை விட 1.36% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தெற்கு மண்டலம் | | | | | | |
| 21 | தெற்கு மண்டலம்– வார்டு எண்.90–க்குட்பட்ட கோவைப்புதூர் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் அருகில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9668/2021/எம்.டி.4 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள்.17.12.21 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).தி/ள்.செவ்வேல் அன் கோ மதிப்பீட்டை விட 4.99% குறைவு | தி/ள்.செவ்வேல் அன் கோ மதிப்பீட்டை விட 4.99% குறைவு |
| 22 | தெற்கு மண்டலம்– வார்டு எண்.99–க்குட்பட்ட போத்தனூர் சுப்பராயமுதலியார் வீதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9670/2021/எம்.டி.4 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள்.17.12.21 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. என்.தங்கவேல் மதிப்பீட்டை விட 3.63% குறைவு | திரு. என்.தங்கவேல் மதிப்பீட்டை விட 3.63% குறைவு |
| 23 | தெற்கு மண்டலம்– வார்டு எண்.92–க்குட்பட்ட பாலக்காடு பிரதான சாலை தெற்கு மண்டலம் அலுவலகம் அருகில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9671/2021/எம்.டி.4 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள்.17.12.21 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).தி/ள்.செவ்வேல் அன் கோ மதிப்பீட்டை விட 4.99% குறைவு | தி/ள்.செவ்வேல் அன் கோ மதிப்பீட்டை விட 4.99% குறைவு |
| 24 | தெற்கு மண்டலம்– வார்டு எண்.95–க்குட்பட்ட போத்தனூர் சத்திரம் வீதி பகுதியில் நகரப்பொது சுகாதார ஆய்வு கூடம் கட்டுதல்.<br>ந.க.எண்.9676/2021/எம்.டி.4 | 22.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள்.17.12.21 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு. என்.தங்கவேல் மதிப்பீட்டை விட 4.94% குறைவு | திரு. என்.தங்கவேல் மதிப்பீட்டை விட 4.94% குறைவு |
| மத்திய மண்டலம் | | | | | | |
| 25 | மத்திய மண்டலம் – வார்டு எண்.80–க்குட்பட்ட எம்என்ஜி வீதியில் உள்ள மாநகராட்சி நடுநிலை பள்ளி அருகில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9729/2021/எம்.டி.5 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட 6.07 % அதிகம்<br><br>2).திரு. பி.இளங்கோ மதிப்பீட்டை விட 1.87% குறைவு | திரு. பி.இளங்கோ மதிப்பீட்டை விட 1.87% குறைவு |
| 26 | மத்திய மண்டலம் – வார்டு எண்.82–க்குட்பட்ட பிரதான அலுவலகம் பகுதியில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9730/2021/எம்.டி.5 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட 1.23 % அதிகம்<br><br>2).திரு. பி.இளங்கோ மதிப்பீட்டை விட 1.13% குறைவு | திரு. பி.இளங்கோ மதிப்பீட்டை விட 1.13% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27 | மத்திய மண்டலம் – வார்டு எண்.72–க்குட்பட்ட நஞ்சப்பா சாலை மருந்தகம் அருகில் நகர்ப்புற சுகாதார நல்வாழ்வு மையம் கட்டுதல்.<br><br>ந.க.எண்.9733/2021/எம்.டி.5 | 25.00 | நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை நாள். 17.12.2021 | முதலாம் அழைப்பு 19.01.2022 | 1).திருமதி. கே.பங்கஜம் மதிப்பீட்டை விட 8.56 % அதிகம்<br><br>2). தி/ள்.என்பிகே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.75% குறைவு<br><br>3).திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 2.81% குறைவு | திரு. எஸ்.முத்துராஜா மதிப்பீட்டை விட 2.81% குறைவு |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களுக்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.9677/2021/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 22 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 4

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல வார்டு எண் 28,29,30 மற்றும் 31 க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் கசிவுகளை சரிசெய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டல வார்டு எண் 28,29,30 மற்றும் 31 க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் கசிவுகளை சரிசெய்தல்<br><br>ந.க.எண். 1454/2021/எம்டி2 | 13.00 | முன் அனுமதி நாள். 18.01.2021 | மூன்றாம் அழைப்பு 21.01.2022 | 1).தி/ள்.அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.04%குறைவு<br>2). தி/ள்.ஏகே கன்ஸ்ட்ரக்சன் மதிப்பீட்டை விட 1.62% அதிகம் | தி/ள்.அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.04%குறைவு |

மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோர, நிர்வாக அனுமதிக்கு முன் அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டியும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணியின் குறைந்த ஒப்பந்த புள்ளியினை ஏற்கவும் மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 1454/2021/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 23 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| பாராளுமன்ற உறுப்பினர் நிதி | | | | | | |
| 1 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 33–க்குட்பட்ட புது காலனி பகுதியில் சமுதாய கூடம் மற்றும் உணவு கூடம் அமைத்தல். ந.க.எண்.10730/2019/எம்.டி.5 | 22.00 | மா.ஆ.உ நாள். 22.11.2019 | மறு அழைப்பு 21.01.2022 | 1).திரு. ஏ.விஜய குமார் மதிப்பீட்டை விட 0.09%குறைவு<br><br>2).திரு. வி.ராஜ கோபால் மதிப்பீட்டை விட **1.28% அதிகம்**<br><br>3).திரு. கே.முருகேசன் மதிப்பீட்டை விட 0.10% குறைவு<br><br>4).திரு. கே.சுந்தரம் மதிப்பீட்டை விட 0.003% அதிகம் | திரு. கே.முருகேசன் மதிப்பீட்டை விட 0.10% குறைவு |
| | சட்டமன்ற உறுப்பினர் நிதி | | | | | |
| 2 | மேற்கு மண்டலம் வார்டு எண் 24–க்குட்பட்ட ஆர்.எஸ்.புரம் காந்திபார்க் பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை அமைத்தல். ந.க.எண்.5495/2018/எம்.டி.5 | 12.00 | மா.ஆ.உ நாள். 24.08.2018 | மறு அழைப்பு 21.01.2022 | 1).திரு. ஏ.விஜயகுமார் மதிப்பீட்டை விட 0.01%குறைவு | திரு. ஏ.விஜயகுமார் மதிப்பீட்டை விட 0.01%குறைவு |
| 3 | மேற்கு மண்டலம் வார்டு எண் 24–க்குட்பட்ட மேட்டுபாளையம் சாலை பூமார்கெட் பேருந்து நிறுத்தத்தில் பயணிகள் நிழற்குடை அமைத்தல். ந.க.எண்.5496/2018/எம்.டி.5 | 12.00 | மா.ஆ.உ நாள். 24.08.2018 | மறு அழைப்பு 21.01.2022 | 1).திரு. ஏ.விஜயகுமார் மதிப்பீட்டை விட 0.01%குறைவு | திரு. ஏ.விஜயகுமார் மதிப்பீட்டை விட 0.01%குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.10730/2019/எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 24 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டல வார்டு எண் 86 க்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் அமைத்தல் பணிக்கு 21.01.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 24.01.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 86-க்குட்பட்ட புல்லுகாடு ஹவுசிங் யூனிட் ஆடு அறுவை மையம் பின்புறம் உள்ள டோபிகானா திட்ட பகுதிகளில் எல்.இ.டி தெருவிளக்குகளுடன் கூடிய மின் கம்பம் அமைத்தல் பணி ந.க.எண்.7970/2021/எம்.டி.4 | 22.50 | ம.தீ.எண் 481 நாள் 26.10.2021 | முதலாம் அழைப்பு 21.01.2022 | 1).தி/எ. ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பி லிட் மதிப்பீட்டை விட 3.84% குறைவு<br>2).தி/எ.ஆர்&என் எலக்ட்ரிகல்ஸ் மதிப்பீட்டை விட 6.89% அதிகம் | தி/எ. ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பி லிட் மதிப்பீட்டை விட 3.84% குறைவு |
| 2 | வார்டு எண் 86-க்குட்பட்ட புல்லுகாடு ஹவுசிங் யூனிட் உக்கடம் திட்டம்-4 மற்றும் பிள்ளையார்புரம் திட்டம் ஆகிய பகுதிகளில் எல்.இ.டி தெருவிளக்குகளுடன் கூடிய மின் கம்பம் அமைத்தல் பணி ந.க.எண்.7969/2021/எம்.டி.4 | 38.50 | ம.தீ.எண் 482 நாள் 26.10.2021 | முதலாம் அழைப்பு 21.01.2022 | 1).தி/எ. ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பி லிட் மதிப்பீட்டை விட 3.85% குறைவு<br>2).தி/எ. ஆர்&என் எலக்ட்ரிகல்ஸ் மதிப்பீட்டை விட 6.79% அதிகம் | தி/எ. ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மெண்ட்ஸ் பி லிட் மதிப்பீட்டை விட 3.85% குறைவு |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களுக்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7970/2021/எம்.டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 25 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி 100 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வாக்கு சாவடிகள், (Polling Stations)/ வாக்கு எண்ணுகை மையங்கள் (Counting Centers), பாதுகாப்பு அறைகள் (Strong Room), உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அறைகள், மற்றும் பதற்றமான வாக்கு சாவடி மையம் ஆகிய இடங்களில் உள்ளாட்சி தேர்தல் ஆணையத்தின்வழிகாட்டுதலின்படி, CCTV கேமரா அமைத்தல் மற்றும் Web streaming பொருத்துதல் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.55.40 இலட்சத்திற்கு 20.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 21.01.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி 100 வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலுக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வாக்கு சாவடிகள், (Polling Stations)/ வாக்கு எண்ணுகை மையங்கள் (Counting Centres), பாதுகாப்பு அறைகள் (Strong Room), உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அறைகள், மற்றும் பதற்றமான வாக்கு சாவடி மையம் ஆகிய இடங்களில் உள்ளாட்சி தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, CCTV கேமரா அமைத்தல் மற்றும் Web streaming பொருத்துதல் பணி. | **55.40** | முன் அனுமதி. நாள். **21.01.2022** | **21.01.2022** | **1)**.தி/ள்.ஐ நெட் செக்யூர் லேப்ஸ் பி.லிட், சென்னை மதிப்பீட்டுத் தொகை<br><br>**2)**.தி/ள்.எஸ்.என். ஆர். எடிட்ஸ் பி.லிட், ஹைதராபாத் மதிப்பீட்டை விட **0.02%** குறைவு (விலை குறைப்பிற்கு பின்) **0.44%** குறைவு | தி/ள்.எஸ்.என்.ஆர். எடிட்ஸ் பி.லிட், ஹைதராபாத் மதிப்பீட்டை விட **0.44%** குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.44%** குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த தி/ள்.எஸ்.என்.ஆர்.எடிட்ஸ் பி.லிட், ஹைதராபாத் அவர்களது ஒப்பந்த புள்ளியை ஏற்கவும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதி மேற் கொள்ளப்பட்ட பணிகளின் நிர்வாக அனுமதிக்கு முன்அனுமதி பெறப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.4535/2021/எம்.சி8(உ.தே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 26 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு, மேற்கு ,வடக்கு, தெற்கு, மத்திய மண்டலம் மற்றும் பிரதான அலுவலகத்தில் அலுவலகப்பணிகளுக்கு கணிணி இயக்குதல் மற்றும் விபர பதிவு பணிகளுக்கும் பொறியியல் மற்றும் நகரமைப்பு பிரிவு களப்பணிகளுக்கும் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அலுவலக பணிகளில் ஏற்படும் தேக்கங்களை தவிர்க்கும் பொருட்டு முறையே மண்டல அலுவலகத்தில் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்களையும் , பொறியாளர்களுக்கு உதவியாக தொழில்நட்ப உதவியாளர்களையும் பணி அமர்த்தி பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்து மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டது.

| வ.எண் | ந.க.எண் | மண்டலம் | பணிகளின் பெயர் | தேவையான பணியாளர்கள் | மதிப்பிடு (இலட்சம்) (ரூ) | ம.தீ.எண் மற்றும் நாள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 4713/2021/எம்.டி.3 | கிழக்கு | கோயம்புத்தூர் மாநகராட்சி– கிழக்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கணிணி விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் | 15 பணியாளர்கள் | 35.20 | 409/ 30.07.2021 |
| 2. | 4714/2021/எம்.டி.2 | மேற்கு | கோயம்புத்தூர் மாநகராட்சி– மேற்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கணிணி விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் | 15 பணியாளர்கள் | 35.20 | 409/ 30.07.2021 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | 4715/2021/எம்.டி.2 | வடக்கு | கோயம்புத்தூர் மாநகராட்சி– வடக்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கணினி விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் | 18 பணியாளர்கள் | 42.25 | 408/ 30.07.2021 |
| 4. | 4721/2021/எம்.டி.4 | தெற்கு | கோயம்புத்தூர் மாநகராட்சி– தெற்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கணினி விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் | 13 பணியாளர்கள் | 30.50 | 408/ 30.07.2021 |
| 5. | 4716/2021/எம்.டி.5 | மத்தியம் | கோயம்புத்தூர் மாநகராட்சி– மத்தியம் மண்டல அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கணினி விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் | 19 பணியாளர்கள் | 44.60 | 407/ 30.07.2021 |
| 6. | 4718/2021/எம்.டி.5 | கிழக்கு, மேற்கு மற்றும் பிரதான அலுவலகம் | கோயம்புத்தூர் மாநகராட்சி– கிழக்கு, மேற்கு மற்றும் பிரதான அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்களை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்துதல் | 15 பணியாளர்கள் | 42.70 | 411/ 30.07.2021 |
| 7. | 4719/2021/எம்.டி.5 | வடக்கு தெற்கு மற்றும் மத்தியம் | கோயம்புத்தூர் மாநகராட்சி– வடக்கு தெற்கு மற்றும் மத்தியம் மண்டல அலுவலகங்களில் ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்களை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்துதல் | 16 பணியாளர்கள் | 45.54 | 413/ 30.07.2021 |
| 8. | 4717/2021/எம்.டி.5 | பிரதான அலுவலகம் | கோயம்புத்தூர் மாநகராட்சி– பிரதான அலுவலகத்தில் ஒப்பந்த அடிப்படையில் கணினி விபர பதிவாளர்கள், வலைமைப்பு பொறியாளர் மற்றும் உதவி வலையமைப்பு பொறியாளர் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்துதல் | 32 பணியாளர்கள் | 76.55 | 410/ 30.07.2021 |
| 9. | 4720/2021/எம்.டி.3 | அனைத்து மண்டலம் | கோயம்புத்தூர் மாநகராட்சி– அனைத்து மண்டலங்களுக்குட்பட்ட நகரமைப்பு பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளர்களை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்துதல் | 18 பணியாளர்கள் | 51.24 | 412/ 30.07.2021 |

இந்நிலையில், மேற்கண்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னை ந.க.எண். 21787/2021/EA2 நாள். 02.10.2021 சுற்றறிக்கையில், போதுமான பணியாட்கள் வெளிகொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர்கள் அமர்த்துதல், அளவுக் கோல்கள், பொது வழிமுறைகள் வழங்கப்பட்டதில், கணினி இயக்குபவர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களை பணி அமர்த்துவதற்கு என ஊதியம் எதுவும் நிர்ணயம் செய்து வழங்கப்படவில்லை.

மேலும், மாநகராட்சியில் கணினி இயக்குபவர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களின் ஒப்பந்த காலம் முடிவடையும் நிலையில், மாநகராட்சியில் ஒப்பந்த பணி மூலம் குறைந்தபட்ச தொகுப்பூதியம் என்ற முறையில் நிர்ணயம் செய்து திருத்திய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஏற்கனவே வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியை ரத்து செய்ய மாமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.4713/2021/எம். டி 3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 27 நாள் 25.01.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 9**

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் **2020–21**-ம் ஆண்டிற்கு தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP) நிறுவனத்தின் மூலம் உலக வங்கி திட்டத்தின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ**3493.00** இலட்சத்திற்கு அரசாணை எண். **02** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.**2**) துறை நாள்.**07.01.2021** அரசாணையின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, **8** சிப்பங்களாக பிரிக்கப்பட்டு **18.02.2021**-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிக்கான மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதில் தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP)-ன் நிபந்தனைகளின்படி ஒப்பந்தப்புள்ளி குறைபாடுகள் உள்ளதால் **8** சிப்பம் பணிகளுக்கு தேர்வு செய்யப்பட இயலாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் **6** சிப்பம் பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள மாமன்ற தீர்மான எண். **262** நாள்.**26.02.2021** -ன் படி நிறைவேற்றப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகிறது.

இதனைத்தொடர்ந்து, கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு பகுதிகளில் தற்சமயம் பழுதடைந்துள்ள சாலைகள், பாதாள சாக்கடை குழாய் அமைப்பதற்கு தோண்டப்பட்ட, குடிநீர் குழாய்கள் பதிப்பதற்கு தோண்டப்பட்ட சாலைகள், மழையினால் சேதமடைந்துள்ள சாலைகளின் முன்னுரிமை அடிப்படையில் சாலைகளை சீரமைப்பு செய்வதற்கு தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP) நிறுவனத்தின் மூலம் **2020–21** ஆண்டிற்கு **51.35** கி.மீ நீளத்திற்கு மாற்று பணிக்களுக்கான மதிப்பீடு ரூ**3493.00** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு **8** சிப்பங்களாக பிரிக்கப்பட்டு **29.12.2021** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், சிப்பங்கள் எண். **3,4,5,6,7** மற்றும் **8** ஆகியவற்றிற்கு தகுதிவாய்ந்த ஒப்புந்தப்புள்ளிகள் அளிக்கப்படவில்லை. மேலும், சிப்பம் எண். **1** மற்றும் **2** ஆகிய இரண்டு சிப்பங்களுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தாரர் |
|---|---|---|---|---|---|---|
| **1** | **2045**/ 2020/ எம்டி.4 சிப்பம் 1 | கிழக்கு மண்டலம் வார்டு எண் 32& 37–க்குட்பட்ட தண்ணீர் பந்தல் சாலையில் மகேஸ்வரி நகர் சந்திப்பு முதல் விளாங்குறிச்சி பாலம் வரையுள்ள சாலைகளை புதுப்பித்தல். | **528.35** | முதலாம் அழைப்பு 29.12.2021 | **1)**.திரு.பி.பாஸ்கர், மதிப்பீட்டை விட 4.53% அ**திகம்** | திரு.பி.பாஸ்கர், மதிப்பீட்டை விட 4.53% அ**திகம்** |
| **2** | **2045**/ 2020/ எம்டி.4 சிப்பம் 2 | வடக்கு மண்டலம் வார்டு எண் 28 மற்றும் 30க்குட்பட்ட தார்ச்சாலைகளை புதுப்பித்தல். (**1**.சின்னமேட்டுபாளையம் பிரதான சாலை **2.** விநாயகபுரம் பிரதான சாலை) | **290.00** | முதலாம் அழைப்பு 29.12.2021 | தி/ள்.பி.எஸ்.கே. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.99% அ**திகம்** | தி/ள்.பி.எஸ்.கே. அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 4.99% அ**திகம்** |

இப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை தொழில்நுட்ப திறனாய்வு செய்து தடையின்மை சான்று பெறுவதற்கு தமிழ்நாடு நிலையான நகர்புற மேம்பாட்டு திட்டம் (TNSUDP) நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டது. அந்நிறுவனத்திடமிருந்து சிப்பம் எண். **1** மற்றும் **2** ஆகியவற்றிற்கு **20.01.2022** அன்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது.

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களுக்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். **2045**/2020/எம்டி.4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 28 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டல அலுவலகத்தில் அலுவலகப்பணிகளுக்கு கணிணி இயக்குதல் மற்றும் விபர பதிவு பணிகளுக்கும், பொறியியல் மற்றும் நகரமைப்பு பிரிவு களப்பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அலுவலக பணிகளில் ஏற்படும் தேக்கங்களை தவிர்க்கும் பொருட்டு முறையே மண்டல அலுவலகத்தில் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு உதவியாக தொழில் நுட்ப உதவியாளர்களை ஒப்பந்த பணி மூலம் தொகுப்பு ஊதியம் முறையில் பணி அமர்த்தி பணி மேற்கொள்ள அவசியம் ஏற்படுகிறது. எனவே அதன் அடிப்படையில் மேற்கொள்ள உள்ள பணிகள் விபரம் பின்வருமாறு –

| வ.எண். | மண்டலம் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | மேற்கு | மேற்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 23.00 |
| 2. | மேற்கு | மேற்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் தொழில் நுட்ப உதவியாளர்களை பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 25.00 |

எனவே, கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படை முறையில் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4714/2021/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 29 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 11**

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டல அலுவலகத்தில் அலுவலகப்பணிகளுக்கு கணிணி இயக்குதல் மற்றும் விபர பதிவு பணிகளுக்கும், பொறியியல் மற்றும் நகரமைப்பு பிரிவு களப்பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அலுவலக பணிகளில் ஏற்படும் தேக்கங்களை தவிர்க்கும் பொருட்டு முறையே மண்டல அலுவலகத்தில் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு உதவியாக தொழில் நுட்ப உதவியாளர்களை ஒப்பந்த பணி மூலம் தொகுப்பு ஊதியம் முறையில் பணி அமர்த்தி பணி மேற்கொள்ள அவசியம் ஏற்படுகிறது. எனவே அதன் அடிப்படையில் மேற்கொள்ள உள்ள பணிகள் விபரம் பின்வருமாறு –

| வ.எண். | மண்டலம் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | வடக்கு | வடக்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 23.00 |
| 2. | வடக்கு | வடக்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் தொழில் நுட்ப உதவியாளர்களை பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 25.00 |

எனவே, கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படை முறையில் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4715/2021/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 30 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டல அலுவலகத்தில் அலுவலகப்பணிகளுக்கு கணிணி இயக்குதல் மற்றும் விபர பதிவு பணிகளுக்கும், பொறியியல் மற்றும் நகரமைப்பு பிரிவு களப்பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அலுவலக பணிகளில் ஏற்படும் தேக்கங்களை தவிர்க்கும் பொருட்டு முறையே மண்டல அலுவலகத்தில் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு உதவியாக தொழில் நுட்ப உதவியாளர்களை ஒப்பந்த பணி மூலம் தொகுப்பு ஊதியம் முறையில் பணி அமர்த்தி பணி மேற்கொள்ள அவசியம் ஏற்படுகிறது. எனவே அதன் அடிப்படையில் மேற்கொள்ள உள்ள பணிகள் விபரம் பின்வருமாறு –

| வ.எண். | மண்டலம் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | தெற்கு | தெற்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 27.00 |
| 2. | தெற்கு | தெற்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் தொழில் நுட்ப உதவியாளர்களை பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 23.00 |

எனவே, கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படை முறையில் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4721/2021/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 31 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 13**

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டல அலுவலகத்தில் அலுவலகப்பணிகளுக்கு கணிணி இயக்குதல் மற்றும் விபர பதிவு பணிகளுக்கும், பொறியியல் மற்றும் நகரமைப்பு பிரிவு களப்பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அலுவலக பணிகளில் ஏற்படும் தேக்கங்களை தவிர்க்கும் பொருட்டு முறையே மண்டல அலுவலகத்தில் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு உதவியாக தொழில் நுட்ப உதவியாளர்களை ஒப்பந்த பணி மூலம் தொகுப்பு ஊதியம் முறையில் பணி அமர்த்தி பணி மேற்கொள்ள அவசியம் ஏற்படுகிறது. எனவே அதன் அடிப்படையில் மேற்கொள்ள உள்ள பணிகள் விபரம் பின்வருமாறு –

| வ.எண். | மண்டலம் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | மத்தியம் | மத்தியம் மண்டல அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 23.00 |
| 2. | மத்தியம் | மத்தியம் மண்டல அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் தொழில் நுட்ப உதவியாளர்களை பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 36.00 |

எனவே, கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படை முறையில் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4716/2021/எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 32 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி, பிரதான அலுவலகத்தில் மாநகரப்பொறியாளர் அறை, நிர்வாக பொறியாளர் அறை, படவரைவாளர் அறை, வாகனப்பிரிவு, நகரமைப்பு பிரிவு, மக்கள் தொடர்பு பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு, தேர்தல் பிரிவு, மாமன்ற பிரிவு, தகவல் மையம், JNNURM பிரிவு, பொதுப்பிரிவு, கல்வி பிரிவு, கணினி பிரிவு, கணக்கு பிரிவு, பிறப்பு இறப்பு பிரிவு ஆகிய பிரிவு அலுவலகங்களில் அலுவலகப்பணிகளுக்கு கணிணி இயக்குதல் மற்றும் விபர பதிவு பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அலுவலக பணிகளில் ஏற்படும் தேக்கங்களை தவிர்க்கும் பொருட்டு முறையே பிரதான அலுவலகத்தில் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்களை ஒப்பந்த பணி மூலம் தொகுப்பு ஊதியம் முறையில் பணி அமர்த்தி பணிகளை மேற்கொள்ள அவசியம் ஏற்படுகிறது. எனவே அதன் அடிப்படையில் மேற்கொள்ள உள்ள பணிகள் மற்றும் மதிப்பீட்டு விபரம் பின்வருமாறு –

| வ.எண். | மண்டலம் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பிரதான | பிரதான அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 62.50 |

எனவே, கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்களை ஒப்பந்த பணி மூலம் தொகுப்பு ஊதியம் முறையில் பணியமர்த்தும் பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4717/2021/எம்டி5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 33 நாள் 25.01.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2021-2022-ன் கீழ் ரூ.10.01 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 12 சிப்பங்களாக (89 சாலை பணிகள்) பிரிக்கப்பட்டு மாமன்ற தீர்மான எண்.498 நாள்.26.10.2021ல் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.19089/2021/E2 நாள்.12.11.2021ன் படி (TURIP) 2021-2022-ன் கீழ் ரூ.10.01 கோடி அனுமதி பெறப்பட்டு, 01.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 10 சிப்பங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் 17.12.2021 தேதி முன் அனுமதியின்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனங்களுக்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மாமன்ற தீர்மான எண்.553 நாள்.31.12.2021–ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்டுள்ள 12 சிப்பங்களில், ஒப்பந்தப்புள்ளி பெறப்படாத 10–வது சிப்பத்திற்கு 19.01.2022 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22.01.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| **சிப்பம் எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** | **ஒப்பந்தப் புள்ளி நாள்** | **பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள்** | **தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தாரர்** |
|---|---|---|---|---|---|
| **8093/ 2021/ எம்டி.3/ சிப்பம் 10** | வார்டு எண். 86– க்குட்பட்ட பிலால் எஸ்டேட் பிரதான சாலை முதல் வீதி, முதல் வீதி குறுக்கு சாலை–1,2,3,4 வரையிலான குறுக்கு சாலை மற்றும் சாரமேடு பிரதான சாலைகளில் தார்தளம் புதுப்பித்தல் பணி. | 82.00 | 19.01.2022 | 1).தி/ள்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் **மதிப்பீட்டை விட 1.03% குறைவு**<br><br>2).தி/ள்.விஷ்ணு இன்ப்ரா ஸ்ட்ரக்சர் **மதிப்பீட்டை விட 3.68% குறைவு** | தி/ள்.விஷ்ணு இன்ப்ரா ஸ்ட்ரக்சர் **மதிப்பீட்டை விட 3.68% குறைவு** |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு: | 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அவசரம் அவசியம் முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மன்றம் அனுமதிக்கலாம். |

ந.க.எண். 8093/2021/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 34 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 16

கோயம்புத்தூர் மாநகராட்சி, National Urban Livelihood Mission (DAY-NULM) நிதியின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண் 38038 /2013 /UPA2-2, நாள் 25.02.2021 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்கு மண்டலம் –வார்டு எண் 24-க்குட்பட்ட ஆரோக்கியசாமி வீடற்றோர் இரவு தங்கும் விடுதி அலகு–1 பாரமரித்தல் பணிக்கு 30.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கீழ்க்காணும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கினர்.

1. தி/ள். மலரும் விழிகள் சமூக நலச் சங்கம் , கோயம்புத்தூர்.
2. தி/ள். வ.உ.சி சேவா அறக்கட்டளை , கோயம்புத்தூர்.

இரண்டு நிறுவனங்கள் வழங்கிய ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப கூராய்வு செய்யப்பட்டதில் தி/ள். வ.உ.சி சேவா அறக்கட்டளை, கோயம்புத்தூர் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லை.

தி/ள். மலரும் விழிகள் சமூக நலச் சங்கம், கோயம்புத்தூர் என்ற நிறுவனம் தொழில் நுட்ப கூராய்வில் தகுதி பெற்றதன் அடிப்படையில் 24.01.2022 அன்று விலைப்புள்ளி அடங்கிய உறை திறக்கப்பட்டது. அதன் விபரம் பின் வருமாறு :

இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 21.01.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்ததாரர் கோரிய தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி , மேற்கு மண்டலம் , வார்டு எண் 24-க்குட்பட்ட ஆரோக்கியசாமி வீடற்றோர் தங்கும் விடுதி அலகு–1 பாரமரித்தல் பணி | ரூ. 12.00 இலட்சங்கள் | தி/ள். மலரும் விழிகள் சமூக நலச் சங்கம் , கோயம்புத்தூர். | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.31.00<br>100 நபர்கள் x<br>365 நாட்கள் x<br>ரூ.31.00 =<br>ரூ. 11,31,500/- | **ஏற்கப்பட்டது.**<br>ரூ. 11,31,500/- |

மேலே கண்ட பட்டியலின் படி ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தி/ள். மலரும் விழிகள் சமூக நலச் சங்கம், கோயம்புத்தூர் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தி/ள். மலரும் விழிகள் சமூக நலச் சங்கம், கோயம்புத்தூர் என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்திற்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் : அனுமதிக்கலாம்

ந.க.எண். 7133 /2021 /எம்,இ 5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 35 நாள் 25.01.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 17**

கோயம்புத்தூர் மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு மேற்பார்வையிடுதல், தனி பொறியாளர் நியமனம் செய்தல் பணி (Appointment of Independent Engineer for Solid Waste Management) – நியமனம் செய்வதற்கு, ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களால் **18.11.2021** அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் **06.01.2022** அன்று கீழ்க்காணும் நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கினர்.

1. தி/ள். இன்ஃபராஎன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பெங்களூர்.
2. தி/ள். பிரகர் சாஃப்ட்வேர் டெக்னாலாஜிஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
3. தி/ள். டைடு டெக்னோகிராட்ஸ் லிமிடெட், பெங்களூர்.

மூன்று நிறுவனங்கள் வழங்கிய ஒப்பந்தப்புள்ளிகளை தொழில் நுட்ப கூராய்வு செய்யப்பட்டதில் தி/ள் பிரகர் சாஃப்ட்வேர் டெக்னாலாஜிஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை மற்றும் தி/ள் டைடு டெக்னோகிராட்ஸ் லிமிடெட், பெங்களூர் தொழில் நுட்ப ரீதியாக தகுதி பெறவில்லை,

தி/ள் இன்ஃபராஎன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பெங்களூர் நிறுவனம் தொழில் நுட்ப கூராய்வில் தகுதி பெற்றதன் அடிப்படையில் **21.01.2022** அன்று விலைப்புள்ளி அடங்கிய உறை திறக்கப்பட்டது.

அதன் பின்னர் **21.01.2022** அன்று ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்திடம் விலைப்புள்ளி குறைப்பு செய்து தர கோரப்பட்டதற்கு, மேற்படி நிறுவனத்தாரால் விலை குறைப்பு செய்து **21.01.2022** அன்று கடிதம் பெறப்பட்டது. அதன் விபரம் பின் வருமாறு :

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்ததாரர் கோரிய தொகை | ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் தொகை |
|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை நிர்வகிக்கவும், கண்காணிக்கவும், மேற்பார்வையிடவும் தனி பொறியாளர் நியமனம் செய்தல் பணி (Appointment of Independent Engineer for Solid Waste Management) ந.க.எண் 8480 /2021 / ஜே,என் 5 | தி/ள். இன்ஃபராஎன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பெங்களூர். | ரூ. 91,80,000/– (inclusive of GST, per Year for the entire project period) | **ஏற்கப்பட்டது.**<br>**ரூ. 82,62,000/–** (inclusive of GST, per Year for entire project period)<br>(ஒப்பந்ததாரர் கோரிய தொகைக்கு **10%** குறைவு) **(விலை குறைப்பிற்குப் பின்)** |

மேலே கண்ட பட்டியலின் படி ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தி/ள். இன்ஃபராஎன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பெங்களூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் முன்னிட்டு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தி/ள். இன்ஃபராஎன் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பெங்களூர் நிறுவனத்திற்கு இசைவு கடிதம் (LOA) அனுப்பியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் **:** அனுமதிக்கலாம்

ந.க.எண். 8480 /2021 /ஜே,என் 5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 36 நாள் 25.01.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 18

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மத்திய மண்டலம் வார்டு எண் 82 க்குட்பட்ட மாநகராட்சி பிரதான அலுவலக விக்டோரியா ஹால் கட்டிடத்திற்கு பராமரிப்பு பணிகள் செய்தல்.<br><br>ந.க.எண்.8659/2021/எம்.டி.5 | 61.00 | ம.தீ.எண்.5 15 நாள். 30.11.2021 | முதலாம் அழைப்பு 21.01.2022 | 1).திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 16.00% குறைவு<br>2).திரு.கே. கோவிந்தராஜ் மதிப்பீட்டை விட 6.00% குறைவு<br>3).திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட 8.00% குறைவு<br>4).தி/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.08% குறைவு | திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 16.00% குறைவு |
| 2 | மத்திய மண்டலம்– வார்டு எண்.81–க்குட்பட்ட திருமால் வீதியில் உள்ள CRPF குடியிருப்பிற்கு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல்.<br><br>ந.க.எண்.8028/2021/எம்.டி.5 | 22.50 | ம.தீ.எண். 510 நாள். 30.11.2021 | முதலாம் அழைப்பு 21.01.2022 | 1).திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 9.99 % குறைவு | திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட 9.99 % குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.8659/2021/எம்.டி.5-

**மாநகர மன்ற தீர்மானம் எண் 37 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டல அலுவலகத்தில் அலுவலகப்பணிகளுக்கு கணிணி இயக்குதல் மற்றும் விபர பதிவு பணிகளுக்கும், பொறியியல் மற்றும் நகரமைப்பு பிரிவு களப்பணிகளுக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் அலுவலக பணிகளில் ஏற்படும் தேக்கங்களை தவிர்க்கும் பொருட்டு முறையே மண்டல அலுவலகத்தில் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு உதவியாக தொழில் நுட்ப உதவியாளர்களை ஒப்பந்த பணி மூலம் தொகுப்பு ஊதியம் முறையில் பணி அமர்த்தி பணி மேற்கொள்ள அவசியம் ஏற்படுகிறது. எனவே அதன் அடிப்படையில் மேற்கொள்ள உள்ள பணிகள் விபரம் பின்வருமாறு –

| வ.எண். | மண்டலம் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | கிழக்கு | கிழக்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் கணிணி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 23.00 |
| 2. | கிழக்கு | கிழக்கு மண்டல அலுவலகத்தில் ஒப்பந்தப்பணி மூலம் தொழில் நுட்ப உதவியாளர்களை பணியமர்த்துதல் (ஒரு வருட காலம்) | 27.00 |

எனவே, கணினி இயக்குநர் மற்றும் விபர பதிவாளர்கள் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர்கள் ஒப்பந்த அடிப்படை முறையில் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 4713/2021/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 38 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 20**

கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் சீர்மிகு நகரத்திட்ட பிரிவின் முதன்மை செயல் அலுவலர் அவர்களின் அலுவலக அறை மாரமத்து செய்தல் மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணி செய்தல் பணிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி தீர்மான எண் 149, தேதி 03.02.2021 அன்று நிர்வாக அனுமதி வழங்கி இப்பணிக்கு ஆகும் செலவினத்தொகையை ஸ்மார்ட் சிட்டி திட்டம் மற்றும் இதர செலவினத்தில் மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டது. 16.11.2021 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்புந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணியினை ஏற்க மாமான்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.82-க்குட்பட்ட மாநகராட்சி பிரதான அலுவலகத்திலுள்ள முதன்மை செயல் அலுவலர் அவர்களின் அலுவலக அறை மாரமத்து செய்தல் மற்றும் கூடுதல் அபிவிருத்தி பணி செய்தல் பணிக்கு **ந.க.எண். 1541/2021/ஜே என்4** | **31.75** | தீர்மான எண் 149, தேதி 03.02.2021 | இரண்டாம் அழைப்பு 16.11.2021 | 1). திரு.எஸ்.ராஜீ மதிப்பீட்டை விட 0.58% அதிகம் (விலை குறைப்பிற்குப்பின் மதிப்பீட்டை விட 0.22% குறைவு) | திரு.எஸ்.ராஜீ மதிப்பீட்டை விட 0.58% அதிகம் (விலை குறைப்பிற்குப்பின் மதிப்பீட்டை விட 0.22% குறைவு) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ராஜீ அவர்களின் ஒப்பந்தத்தை ஏற்பதற்கும் மற்றும் இப்பணிக்கு ஆகும் செலவினத்தொகையை ஸ்மார்ட் சிட்டி திட்டம் மற்றும் இதர செலவினத்தில் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண். 1541 / 2021 / ஜே என்4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 39 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 21**

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் -2022-2025-ம் ஆண்டிற்கான (மூன்றாண்டுகள்) வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2021-22-ம் ஆண்டிற்கு ஒப்படைக்கப்பட்ட இனங்களுக்கு 5 சதவீதம் உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - முன் அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

பார்வை
1 அரசு ஆணை (நிலை)எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை நாள்.25.05.2009.
2 ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.30.10.2021

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனஙகளுக்கு 2021-2022ல் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டிற்கு **5%** உயர்வு செய்து குத்தகைத் தொகையாக நிர்ணயம் செய்யவும், மற்றும் 2021-22-ல் ஏலம் கோரப்படாத கீழ்கண்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு மாமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் பொதுமின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்த ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ) முன்றாம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்யப்பட வேண்டிய குத்தகை இனங்கள்**

| வ எ ண் | வ.வி எண். | ஏலதாரர் பெயர் | குத்தகை இனங்கள் | குத்தகை காலம் | 2020-21-ம் முதலாம் ஆண்டிற்கான குத்தகை ரூ. | 2021-22-க்கு இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை ரூ. | 2022-23-க்கு முன்றாம் ஆண்டிற்கான குத்தகை தொகையில் 5% உயர்வுக்கு பின் குத்தகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 15 | பேபி | தடாகம் ரோடு வாழைக்காய் மண்டி மார்க்கெட் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 2022-23 | 4,11,500/- | 4,32,075/- | 4,53,679/- |
| 2 | 23 | எ.அப்துல் ஹக்கிம் | மேட்டுப்பாளையம் ரோடு எம்.ஜி.ஆர் மொத்த காய்கறி மார்க்கெட் சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2022-23 | 81,00,000/- | 85,05,000/- | 89,30,250/- |

**ஆ) 2021-2022-ம் ஆண்டில் முதலாம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட இனங்களுக்கு 5 சதவீதம் உயர்வு செய்து இரண்டாம் ஆண்டிற்கு புதுப்பிக்கப்பட வேண்டிய இனங்கள்**

| வ எ ண் | வ.வி எண். | ஏலதாரர் பெயர் | குத்தகை இனங்கள் | குத்தகை காலம் | 2021-22-ம் முதலாம் ஆண்டிற்கான குத்தகை ரூ. | 2022-23-க்கு இரண்டாம் ஆண்டிற்கான குத்தகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 3 | 21 | திரு. எஸ்.காளியப்பன் | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2022-23 | 1,10,11,557/- | 1,15,62,135/- |
| 4 | 82 | திரு.கே. நடராஜன் | வடவள்ளி வாரசந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2022-23 | 2,95,000/- | 3,09,750/- |
| 5 | 84 | திரு. பளபாசிங் | வடவள்ளி தினசரி சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2022-23 | 2,10,000/- | 2,20,500/- |
| 6 | 26 | திரு. ஆர். வெங்கடேஷ் பிராகாஷ் | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2022-23 | 12,00,100/- | 12,60,105/- |
| 7 | 83 | திரு. ஆர்.ராஜன் | கவுண்டம்பாளையம் ஆடு அறுமனை கட்டண வசூலிக்கும் உரிமம் | 2022-23 | 1,19,700/- | 1,25,685/- |

**இ) பொது மின் ஏலத்திற்கு சேர்க்கப்பட வேண்டிய குத்தகை இனங்கள்**

| வ. எண் | வார்டு எண். | குத்தகை எண். | குத்தகை இனம் | வைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 8. | 22 | 22 | மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா மார்க்கெட் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 62,500/- |
| 9. | 10 | 24 | மேட்டுப்பாளையம் ரோடு MGR மொத்த காய்கறி மார்க்கெட் இரண்டு கட்டணக் கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 62,500/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 10. | 10 | 25 | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையம் பேருந்து நுழைவு கட்டணம் வசூல் மற்றும் குளிரூட்டப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் ஓய்வறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,50,000/- |
| 11. | 10 | 105 | மேட்டுப்பாளையம் ரோடு புதிய பேருந்து நிலையத்தில் தரை தளத்தில் உள்ள ஆண்கள் பெண்கள் நவீன கட்டணக் கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 62,500/- |

**ஈ) முந்தைய ஆண்டியில் ஏலம் கோரப்படாத இனங்கள் தற்போது மராமத்து பணிகள் செய்ய கோப்பு நடவடிக்கையில் உள்ளது**

| வ. எண் | வார்டு எண். | வ.வி. எண். | குத்தகை இனம் | வரிவசூலரின் குறிப்பு |
|---|---|---|---|---|
| 12. | 24 | 19 | பன்னீர் செல்வம் பூமார்க்கெட் கட்டண கழிப்பிடம் வசூலிக்கும் உரிமம் | பழுதடைந்த நிலையில் உள்ளது. |
| 13. | 24 | 18 | காந்திபார்க் கட்டண கழிப்பிடம் வசூலிக்கும் உரிமம் | பழுதடைந்த நிலையில் உள்ளது. |

**உ)ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்யப்பட வேண்டிய இனம்**

| வ. எண் | வார்டு எண். | குத்தகை எண். | குத்தகை இனம் |
|---|---|---|---|
| 14. | 5 | 72 | அம்பேத்கார் நகர் (மேற்கு) கட்டணக் கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் |
| 15. | 16 | 83 | வடவள்ளி பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 16. | 24 | 20 | டி.பி. ரோடு வாகனங்கள் நிறுத்தும் இடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 17. | 24 | 17 | தடாகம் ரோடு கட்டண கழிப்பிடம் வசூலிக்கும் உரிமம் |
| 18. | 17 | 103 | மருதமலை அடிவாரம் கட்டண கழிப்பிடம் வசூலிக்கும் உரிமம். |

**ஊ) பொறியியல் பிரிவிலிருந்து மேற்கு மண்டலம் குத்தகை இனங்களுக்கு ஓப்படைப்பு செய்யப்படாத இனம்**

| வ. எண் | வார்டு எண். | குத்தகை எண். | குத்தகை இனம் |
|---|---|---|---|
| 19. | 24 | 16 | காந்திபார்க் உடற்பயிற்சி கூடம் (GYM) |
| 20. | 24 | 86 | காந்திபார்க் நீச்சல் குளம் |

**எ) வழக்கு நிலுவையில் உள்ள குத்தகை இனம்**

| வ. எண் | வார்டு எண். | குத்தகை எண். | குத்தகை இனம் |
|---|---|---|---|
| 21. | 24 | 14 | பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் சுங்க கட்டணம் வசீலிக்கும் உரிமம் |

| | |
|---|---|
| **அ** | வரிசை எண்.1 முதல் 2 வரை (2 இனங்கள்) இனங்களுக்கு இரண்டாம் ஆண்டு குத்தகை தொகையில் 5சதவீதம் உயர்வு செய்து மூன்றாம் ஆண்டுக்கு புதுப்பிக்கலாம். |
| **ஆ** | வரிசை எண்.3 முதல் 7 வரை (5 இனங்கள்) இனங்களுக்கு முதலாம் ஆண்டு குத்தகை தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து இரண்டாம் ஆண்டுக்கு புதுப்பிக்கலாம். மேலும் மேற்படி இனங்களுக்கு முதலாம் ஆண்டுக்கு முன்பண ஏலத் தொகையாக கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையினை இரண்டாம் ஆண்டிற்கு குத்தகை தொகையில் சரிகட்டல் செய்யவும் மீதமுள்ள தொகைக்கு அறிவிப்பு வழங்கலாம். |

| | |
|---|---|
| இ | வரிசை எண். 8 முதல் 11 வரை உள்ள இனங்களை 2022-2025-ம் ஆண்டிற்கான ஏல இனங்களில் சேர்க்கவும், நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பு மற்றும் வைப்புத்தொகையினை அங்கீகரிக்கவும் மேலும் பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படியும், அவ்வப்பொழுது மத்திய மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் வரிகளை குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளை விதிக்கலாம். குத்தகை இனங்களில் ஏற்கனவே துறை மூலம் வசூல் செய்யப்படும் இனங்களுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்கும் வரை தொடர்ந்து துறை மூலம் வசூல் செய்யலாம். |
| ஈ | வரிசை எண்.12 மற்றும் 13ல் உள்ள இனங்கள் மராமத்து பணிகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட வார்டு இளம் பொறியாளர்/உதவி பொறியாளர்களுக்கு அலுவல்சாரா குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முடிவுற்று ஏலத்தில் சேர்க்க அறிக்கை பெற்றபின் மேற்படி இனங்களை ஏலத்தில் சேர்க்கலாம். |
| உ | வரிசை எண்.14 முதல் 18 வரை உள்ள குத்தகை இனங்களில் வரிசை எண்.14ல் உள்ள அம்பேத்கார் நகர் கட்டண கழிப்பிடமானது தற்போது இலவச கழிப்பிடமாக மாற்றப்பட்டுள்ளதாலும், வரிசை எண்.15 மற்றும் 17 ஆகிய குத்தகை இனங்கள் மிகவும் பழுதடைந்தது இடிக்கப்பட்டதாலும், வரிசை எண்.16 உள்ள இனத்தை இனம் இடிக்கப்பட்டு பொறியியல் பிரிவின் மூலம் தற்போது Multi Level Car Parking பணிகள் நடைபெற்று வருதாலும், வரிசை எண்.18ல் உள்ள மருதமலை அடிவாரத்தில் உள்ள கட்டண கழிப்பிடமானது மிகவும் பழுதடைந்து பயன்பாடற்று இடிக்க நிலையில் உள்ளதாலும் இவ்வினங்களை ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்யவும். |
| ஊ | வரிசை எண். 19 மற்றும் 20 குத்தகை இனங்கள் பொறியியல் பிரிவிலிருந்து மேற்கு மண்டல குத்தகை இனங்களுக்கு ஓப்படைப்பு செய்யப்படாததால் அவற்றை ஓப்படைக்க தெரிவிக்கவும், மற்றும் ஓப்படைப்பு செய்யப்பட்ட பின்னர் பொது ஏலத்தில் சேர்க்கலாம். |
| எ | தற்போது ஆர்.ஜி. வீதியில் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்து இயங்கி வரும் பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தற்போது நிலுவையில் உள்ளதால் W P No.23451/2021, இறுதி தீர்ப்பிற்கு பின்பு குத்தகைதாரருக்கு ஒப்படைப்பு செய்யலாம். மேலும் குத்தகைதாரர்களால் ஏற்று கொள்ளாத அனைத்து இனங்களுக்கும் துறை மூலம் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு கட்டணம் வசூலிக்கவும் அதற்கான இரசீதுகள் அச்சிடும் செலவு மற்றும் விளம்பர செலவுகளை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது. |

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க. எண். 143 /2022/அ5(மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 40 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 22

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வருடாந்திர குத்தகை இனங்களில் ஏற்கனவே மூன்றாண்டுகள் முடிவுற்ற கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியும், ஏற்கனவே ஏலம்விடப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம் புதுப்பிக்கவும் வேண்டியுள்ளது.

| ('அ') ஏலம் விடப்பட வேண்டிய இனங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | இனம் | ஏலத் தொகை ரூ. | காப்புத் தொகை ரூ. | சொத்து மதிப்பு சான்றிதழ் ரூ. | சால்வன்ஷி தொகை ரூ. |
| 1 | துடியலூர் வார சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,00,000 | 2,00,000 | 10,00,000 | 2,00,000 |
| 2 | துடியலூர் இரண்டு சக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 25,000 | 25,000 | 1,00,000 | 25,000 |
| 3 | கணபதி நவீன கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 25,000 | 25,000 | 3,00,000 | 75,000 |
| 4 | பாப்பநாயக்கன்பாளையம் நவீன கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 25,000 | 25,000 | 3,00,000 | 75,000 |

| ('ஆ') உரிமம் புதுப்பிக்க வேண்டிய இனங்கள் | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 2021-2022 -ம் ஆண்டு ஏலத் தொகை (முதல் ஆண்டு) | 2022-2023 - இரண்டாம் ஆண்டு ஏலத் தொகை (5% உயர்வு செய்யப்பட்ட தொகை) ரூ. |
| 1 | துடியலூர் நவீன கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திருமதி.விஜயா | 1,18,667 | 1,24,600 |

மேற்காணும் 'அ' வில் உள்ள இனங்களை பொது ஏலம் விடவும், 'ஆ' வில் உள்ள இனங்களின் உரிமம் புதுப்பிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்.03043/2013/அ1(வ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 41 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 23**

| | |
|---|---|
| **பொருள்:** | கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் 2022–23 ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றம் உரிமம் புதுப்பிப்பு செய்வது - தொடர்பாக. |
| **பார்வை:** | அரசாணை எண் 78 ந.நி.ம.கு.வ (மாந 2) துறை நாள் 25.05.2009. |

******************

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட 2022–23 ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களில் ஏற்கனவே உரிமம் ஒப்படைப்பு செய்த இனங்களுக்கு அரசாணையின்படி சென்ற ஆண்டு (2021-2022) குத்தகை தொகையில் 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பிப்பு செய்யப்பட வேண்டியுள்ளது. மேலும் மூன்றாண்டு உரிம காலம் முடிவடைந்த இனங்களுக்கு பொது / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டியுள்ளது.

**1. உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டிய குத்தகை இனங்கள்**

| வ எண் | குத்தகை இனங்கள் | குத்தகை காலம் | குத்தகைதாரர் பெயர்கள் | கேட்பு 2021-2022 | 5% வரி உயர்வு செய்யப்பட்ட கேட்பு 2022-23 |
|---|---|---|---|---|---|
| 1 | உக்கடம் ஆடு அறுவை மணை | இரண்டாம் ஆண்டு | T.C. வெங்கிடசுப்பிரமணி | 12,61,000 /– | 13,24,050 /– |
| 2 | தால் பேக்டரி கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | இரண்டாம் ஆண்டு | J.B நூருல்லா | 2,71,000 /– | 2,84,550 /– |
| 3 | தக்காளி மார்க்கெட் ஏல மேடை | மூன்றாம்ஆண்டு | திரு. கே.ஆர். பழனிச்சாமி | 8,34,750 /– | 8,76,488 /– |
| 4 | சின்ன சுடுகாடு கட்டணக் கழிப்பிடம் | மூன்றாம்ஆண்டு | திரு. கே. கணேஷ் குமார் | 1,55,820 /- | 1,63,611 /– |
| 5 | லாரிப்பேட்டை கட்டணக் கழிப்பிடம் | மூன்றாம்ஆண்டு | திரு. முகமது பஷிர் | 89,355 /- | 93,823 /– |

**2. 2022-23 ம் ஆண்டிற்கு பொது / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டிய இனங்கள்**

| வ எண் | வார்டு எண் | குத்தகை இனங்கள் |
|---|---|---|
| 1 | 85 | செட்டிவீதி கட்டணக் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 2 | 97 | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 3 | 99 | செட்டிபாளையம் ரோடு மாடுவதை சாலை |
| 4 | 97 | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர்பதன கிடங்கு |

மேற்குறிப்பிட்டுள்ள பட்டியல் 1-ல் உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டிய 5 இனங்களுக்கு 2022–23 ஆம் ஆண்டிற்க்கு 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பிப்பு செய்யவும் மற்றும் பட்டியல் 2-ல் குறிப்பிட்டுள்ள 4 ஏல இனங்களுக்கு பொது / மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்படைப்பு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.220/2019/அ1 (தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 42 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

**பொருள்** : குத்தகை - கோயம்புத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம் - 2022-2025-க்கு மூன்றாண்டுகளுக்கான வருடாந்திர குத்தகை இனங்கள் மற்றும் 2022-2023-ம் ஆண்டிற்கு 5 சதவீதம் உயர்வு செய்து புதுப்பித்தல் -பொது ஏலம், மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - தொடர்பாக.

**பார்வை** : ஆணையாளர் அவர்களின் உத்தரவு.

-------------------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகைக்காலம் மூன்றாண்டு முடிவுற்றது மற்றும் 2021-2022-ம் ஏலம் கோரப்படாத கீழ்க்கண்ட வருடாந்திர குத்தகை இனங்களுக்கு 2022-2025 மூன்று ஆண்டுகளுக்கு மாமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் பொது ஏலம், மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

2022-2025-ம் ஆண்டிற்கான ஏல இனங்கள் ( **மூன்றாண்டுகளுக்கு ஏலம் விடப்பட வேண்டிய இனங்கள்)** பொது ஏலம், மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல இனங்கள் | மாமன்ற தீர்மான எண்.465/ 26.10.2021-ல் நிர்ணயம் செய்யப்பட்ட வைப்புத் தொகை ரூ. | 2021- 2024-ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட வேண்டிய அரசு மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| 1 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்குள் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 2,00,000/- | 50000/- |
| 2 | புலியகுளம் மாநகராட்சி நவீன கட்டணக் கழிப்பிடம் கட்டண வசூலிக்கும் உரிமம் | 60.000/- | 75000/- |
| 3 | மாநகராட்சி மருதூர் திருமண மண்டபம் பராமரிக்கும் உரிமம் (மகளிர் சுய உதவிக்குழுக்கள் மட்டும்) | 1,00,000/- | 354445/- |

2021-2022-ல் முதலாண்டு ஒப்படைக்கப்பட்ட இனங்களுக்கு 5 சதவீதம் உயர்வு செய்து இரண்டாம் ஆண்டுக்கு புதுப்பிக்கப்பட வேண்டிய இனங்கள்.

| வ. எண். | குத்தகை இனம்,குத்தகைதாரர் பெயர் | 2021-2022-ம் ஆண்டு குத்தகை தொகை | 2022-2023-ம் ஆண்டுக்கு 5 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 | சிங்காநல்லூர் வார சந்தை கட்டண வசூலிக்கும் உரிமம் **திருமதி.எம்.மாலதி** | 6,42,101/- | 6,74,206/- |
| 5 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திற்குள் பொருள் பாதுகாப்பு அறை கட்டண வசூலிக்கும் உரிமம் **திரு.எம்.ரகுராம்** | 60,000/- | 63,000/- |
| 6 | சிங்காநல்லூர் ஆடு அறுவை மனையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்( கிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட அனைத்து பகுதிகள்) **திரு.எ.சந்திரன்** | 25,10,600/- | 26,36,130/- |

| | |
|---|---|
| வரிசை எண்.1 | துறை மூலம் வசூல் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. |
| வரிசை எண்.2 | பழுதடைந்த நிலையில் உள்ளதால் பராமரிப்பு பணி முடிந்தவுடன் ஏலத்தில் சேர்க்க ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| வரிசை எண்.3 | பொது ஏலம் மூலம் ஒப்படைக்கும் வரை அலுவலகத்தில் பதிவுகள் மேற்கொண்டு மாநகராட்சி நிபந்தனைகளின் படி வாடகை மற்றும் இதர கட்டணம் வசூல் செய்ய ஒப்புதல் வேண்டப்படுகிறது. |
| வரிசை எண்.4 முதல் 6 வரை | இரண்டாம் ஆண்டிற்கு 5 சதவீதம் உயர்வு செய்து முழு குத்தகை செலுத்த தவறும்பட்சத்தில் வைப்புத்தொகைகளை பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் வரவு வைத்து அவர்களது பெயர்களை மாநகராட்சி நிபந்தனைகளின்படி கருப்பு பட்டியிலில் சேர்க்கவும் மேலும் அவ்வினங்களுக்கு துறை மூலம் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு கட்டணம் வசூலிக்க ஒப்புதல் வேண்டப்படுகிறது. |

வரிசை எண்.1 முதல் வரிசை எண்.6 உள்ள மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 668/2017/ கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 43 நாள் 25.01.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 25**

ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென மேற்கொள்ள பில்லூர் இரண்டாவது குடிநீர் வழங்கல் திட்டப்பணியின் கீழ் பில்லூர் அணை பகுதியில் ஒரு தலைமை நீரேற்று நிலையம் நிறுவப்பட்டு, தினமும் சுமார் 125 மில்லியன் லட்சம் லிட்டர் அளவிலான சுத்திகரிப்பு செய்யப்படாத நீர் வெள்ளியங்காடு பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரேற்றுக்குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு மாநகராட்சி பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கூறிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பு பணிகளை (Preventive & Breakdown) மேற்கொள்ளத் தேவையான இயந்திரம் மற்றும் மின் தளவாட பொருட்கள், உயர்மின் மோட்டார்கள் சீராக இயக்க உதவும் உபரி பாகங்கள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள கட்டிடங்களின் பராமரிப்பு பணிகள் ஆகியவற்றை ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ள திட்ட மதிப்பீடு ரூ.92.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கடந்த 29.11.2019–ல் கோரப்பட்டது. ஒப்பந்தத்தில் கலந்து கொண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய, தி/ள். JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி. லிட்., கோயமுத்தூர் என்ற நிறுவனத்திற்கு 01.03.2020 முதல் 12 மாதங்களுக்கு ரூ.92,58,564/–ல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தேவையான இயந்திரம் மற்றும் மின் தளவாட பொருட்கள், உயர்மின் மோட்டார்கள் சீராக இயக்க உதவும் உபரி பாகங்கள் மற்றும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள கட்டிடங்களின் பராமரிப்பு பணிகளை ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்த காலம் முடிவடைந்தது.

இப்பணிக்கான ஒப்பந்தத்தில், பொது விதிமுறைகள் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண். 9.0 – ஒப்பந்தக்காலம் (Period of Contract) பக்கம் எண். 12–ல் பிரிவு 9.2–ல் ஒப்பந்ததாரரின் திருப்திகரமான பணியின் அடிப்படையில் வரடாந்திர பராமரிப்பு கட்டணத்தை ஆண்டுக்கு 5% சதவீதம் விலை உயர்த்தி அடுத்து வரும் இரு ஆண்டுகளுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பணி நீட்டிப்பு வழங்க மாமன்ற தீர்மான எண் 111, நாள் 03.02.2021ல் அனுமதி பெறப்பட்டு 01.03.2021 முதல் 12 மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள விலையிலிருந்து 5% சதவீதம் விலை உயர்த்தி ரூ.97,21,492/–க்கு பணியினை மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 28.02.2022 உடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை வெளியாட்களைக் கொண்டு (Outsourcing) மேற்கொள்ள புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

தி/ள். JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி. லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை திருப்திகரமாக செய்து வருகிறது.

இப்பணிக்கு புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் பெறப்பட்டவுடன் புதியதாக மதிப்பீடு தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி உத்திரவு வழங்க கால தாமதம் ஆகும் என்பதாலும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதியும் 30.04.2022 அல்லது மறு ஒப்பந்தப் புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரையிலான காலம் இதில் எது முன்னர் செயல்பாட்டிற்கு வருகிறதோ அக்காலத்திற்கு, இப்பணியினை தற்சமயம் மேற்கொண்டு வரும் தி/ள்.JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி.லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனமே தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும் கடந்த ஆண்டு (12 மாதங்கள்) வழங்கப்பட்ட தொகையான ரூ.97,21,492/–ல் 5% சேர்த்து மொத்தம் ரூ.1,02,07,567/–ஐ (Including GST 12%) வழங்கவும் மற்றும் இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். 9635/19/ஜே.என்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 44 நாள் 25.01.2022**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

–––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––––

**பொருள் எண் 26**

ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென மேற்கொள்ள பில்லூர் இரண்டாவது குடிநீர் வழங்கல் திட்டப்பணியின் கீழ் பில்லூர் அணை பகுதியில் ஒரு தலைமை நீரேற்று நிலையம் நிறுவப்பட்டு, தினமும் சுமார் 125 மில்லியன் லட்சம் லிட்டர் அளவிலான சுத்திகரிப்பு செய்யப்படாத நீர் வெள்ளியங்காடு பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரேற்றுக்குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு மாநகராட்சி பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கூறிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில், குடிநீர் சுத்திகரிப்புக்காக தேவைப்படும் இரசாயனங்கள் (Chemicals) மற்றும் நுகர் பொருட்கள் (Consumables) மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரின் தரத்தை அறிய தேவைப்படும் பொருட்கள் (Chemical Solution) ஆகியவற்றை ஓராண்டு காலத்திற்கு விநியோகிக்க திட்ட மதிப்பீடு ரூ.93.81 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கடந்த 29.11.2019–ல் கோரப்பட்டது. ஒப்பந்தத்தில் கலந்து கொண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய, தி/ள். JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி. லிட்., கோயமுத்தூர் என்ற நிறுவனத்திற்கு 01.03.2020 முதல் 12 மாதங்களுக்கு ரூ.97,97,357/–ல் குடிநீர் சுத்திகரிப்புக்காக தேவைப்படும் இரசாயனங்கள் மற்றும் நுகர் கொருட்கள் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரின் தரத்தை அறிய தேவைப்படும் பொருட்கள் ஆகியவற்றை ஓராண்டு காலத்திற்கு விநியோகிக்க பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்த காலம் முடிவடைந்தது.

இப்பணிக்கான ஒப்பந்தத்தில், பொது விதிமுறைகள் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண். 9.0 – ஒப்பந்தக்காலம் (Period of Contract) பக்கம் எண். 12–ல் பிரிவு 9.2–ல் ஒப்பந்ததாரரின் திருப்திகரமான பணியின் அடிப்படையில் வரடாந்திர பராமரிப்பு கட்டணத்தை ஆண்டுக்கு 5% சதவீதம் விலை உயர்த்தி அடுத்து வரும் இரு ஆண்டுகளுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பணி நீட்டிப்பு வழங்க மாமன்ற தீர்மான எண் 110, நாள் 03.02.2021ல் அனுமதி பெறப்பட்டு 01.03.2021 முதல் 12 மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள விலையிலிருந்து 5% சதவீதம் விலை உயர்த்தி ரூ.1,02,87,225/–க்கு பணியினை மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 28.02.2022 உடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை வெளியாட்களைக் கொண்டு (Outsourcing) மேற்கொள்ள புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

தி/ள். JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி. லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை திருப்திகரமாக செய்து வருகிறது.

இப்பணிக்கு புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் பெறப்பட்டவுடன் புதியதாக மதிப்பீடு தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி உத்திரவு வழங்க கால தாமதம் ஆகும் என்பதாலும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதியும் 01.03.2022 முதல் 30.04.2022 அல்லது மறு ஒப்பந்தப் புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரையிலான காலம் இதில் எது முன்னர் செயல்பாட்டிற்கு வருகிறதோ அக்காலத்திற்கு, இப்பணியினை தற்சமயம் மேற்கொண்டு வரும் தி/ள்.JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி.லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனமே தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும் கடந்த ஆண்டு (12 மாதங்கள்) வழங்கப்பட்ட தொகையான ரூ.1,02,87,225/–ல் 5% சேர்த்து மொத்தம் ரூ.1,08,01,587/–ஐ (Including GST 12%) வழங்கவும் மற்றும் இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். 9634/19/ஜே.என்.5

<u>**மாநகர மன்ற தீர்மானம் எண் 45 நாள் 25.01.2022**</u>

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 27**

ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கென மேற்கொள்ள பில்லூர் இரண்டாவது குடிநீர் வழங்கல் திட்டப்பணியின் கீழ் பில்லூர் அணை பகுதியில் ஒரு தலைமை நீரேற்று நிலையம் நிறுவப்பட்டு, தினமும் சுமார் 125 மில்லியன் லட்சம் லிட்டர் அளவிலான சுத்திகரிப்பு செய்யப்படாத நீர் வெள்ளியங்காடு பகுதியில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீரேற்றுக்குழாய்கள் மூலம் கொண்டு வரப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்பட்டு மாநகராட்சி பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கூறிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள திட்ட மதிப்பீடு ரூ.75.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, மாமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கடந்த 29.11.2019–ல் கோரப்பட்டது. ஒப்பந்தத்தில் கலந்து கொண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய, தி/ள். JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி. லிட்., கோயமுத்தூர் என்ற நிறுவனத்திற்கு 01.03.2020 முதல் 12 மாதங்களுக்கு ரூ.77,51,199/–ல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்த காலம் முடிவடைந்தது.

இப்பணிக்கான ஒப்பந்தத்தில், பொது விதிமுறைகள் என்ற தலைப்பின் கீழ் வரிசை எண். 9.0 – ஒப்பந்தக்காலம் (Period of Contract) பக்கம் எண். 12–ல் பிரிவு 9.2–ல் ஒப்பந்ததாரரின் திருப்திகரமான பணியின் அடிப்படையில் வரடாந்திர பராமரிப்பு கட்டணத்தை ஆண்டுக்கு 5% சதவீதம் விலை உயர்த்தி அடுத்து வரும் இரு ஆண்டுகளுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யலாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பணி நீட்டிப்பு வழங்க மாமன்ற தீர்மான எண் 109, நாள் 03.02.2021ல் அனுமதி பெறப்பட்டு 01.03.2021 முதல் 12 மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள விலையிலிருந்து 5% சதவீதம் விலை உயர்த்தி ரூ.81,28,759/–க்கு பணியினை மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணி 28.02.2022 உடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை வெளியாட்களைக் கொண்டு (Outsourcing) மேற்கொள்ள புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

தி/ள். JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி. லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை திருப்திகரமாக செய்து வருகிறது.

இப்பணிக்கு புதிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள் பெறப்பட்டவுடன் புதியதாக மதிப்பீடு தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி உத்திரவு வழங்க கால தாமதம் ஆகும் என்பதாலும் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதியும் 01.03.2022 முதல் 30.04.2022 அல்லது மறு ஒப்பந்தப் புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரையிலான காலம் இதில் எது முன்னர் செயல்பாட்டிற்கு வருகிறதோ அக்காலத்திற்கு, இப்பணியினை தற்சமயம் மேற்கொண்டு வரும் தி/ள்.JS அசோசியேட் டெவலப்மெண்ட் இந்தியா பி.லிட்., கோயம்புத்தூர் என்ற நிறுவனமே தொடர்ந்து பணியினை மேற்கொள்ளவும் கடந்த ஆண்டு (12 மாதங்கள்) வழங்கப்பட்ட தொகையான ரூ.81,28,759/–ல் 5% சேர்த்து மொத்தம்ரூ.85,35,197/–ஐ (Including GST 12%) வழங்கவும் மற்றும் இப்பணிக்கான செலவினத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். 9633/19/ஜே.என்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 46 நாள் 25.01.2022</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

(ஒப்பம்) ராஜகோபால் சுன்கரா
தனி அலுவலர்
கோயம்புத்தூர் மாநகராட்சி